# இயேசுவின் சிலுவைத் திருமொழிகள்-7

**சில சிந்தனைக் குறிப்புகள்!**

இயேசு கிறிஸ்து பெருமான், மானிடனாய் வந்த இறைமகன் மட்டுமன்று, இம்மண்ணுலகம் கண்ட இணையற்ற மாபெரும் இறைப் போதகர்! அவரது போதனைகளின் உச்சகட்டமாய், சாதனை வாழ்வின் சாட்சிமொழிகளாய் அவர் இறுதியாய் உதிர்த்த உறுதியான அருள் மொழிகளே அவரது ***7 சிலுவைத் திருமொழிகள்!***

***அவை ஒவ்வொன்றும் ...***

ஆழ்ந்த தெய்வீக உண்மைகளின் அருட் புதையல்!

அரிய வாழ்க்கைத் தத்துவங்களை உணர்த்தும் வைர வரிகள்!!

ஒரு சில முத்துக்கள் மட்டும் இங்கு குறிப்புகளாய்!!!...

**முதல் திருமொழி!**

மன்னிப்பு மாணிக்கம்

**1. பிதாவே! இவர்களுக்கு மன்னியும்!** *(லூக்கா 23:34)*

கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமே, மன்னிப்பு தான்! உலக மனைத்திற்கும் பாவ மன்னிப்பு ஈட்டித் தர சிலுவையில் தொங்கியவர்,அந்த சிலுவைக்கு வழிவகுத்தோரையும் மன்னிக்க, தந்தையிடம் மன்றாடுகிறார்.

***A. மன்னிப்பின் மகத்துவம்:***

அ. **மன்னிக்கப்படுவோரின் அவலநிலை**

அறியாதோர் - இன்று அறிந்தோர்

ஆ. **மன்னிப்பின் அவசியம்**

மன்னிப்பு இன்றேல் மறுவாழ்வு இல்லை

இ. **மன்னிக்க வேண்டுபவரின் மாண்பு**

தேவ குமாரனே மன்னிக்கவும், மன்னிக்க வேண்டவும் தகுதியுண்டு (லூக்கா 24:46,47)

ஈ. **மன்னிப்பு வழங்குவோர் மகிமை**

பிதாவாகிய கடவுளின் நீதியும், இரக்கமும்

***B. மன்னிப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் முறை:***

அ. அறிய வேண்டும்

ஆ. அனுபவிக்க வேண்டும்

இ. அறிவிக்க வேண்டும்

ஈ. அளிக்க வேண்டும் *(நாமும் பிறர்க்கு)*

**இரண்டாம் திருமொழி!**

கடையனுக்கு கடைத்தேற்றம்

**2. இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய்** *(லூக்கா 23:43)*

***A. கர்த்தரின் கருணை:***

கடையனுக்கும் கடைத்தேற்றம் கடைசி நேரத்திலும் தருகிறார் *(யோவான் 3:16)*

அனுபவத்தை - மனமாற்றத்தை முக்கியப் படுத்துகிறார் சடங்குகளை அல்ல...

***B. கள்ளனின் பண்புகள்:***

**அ. பிரகாசமுள்ள மனக்கண்கள்** *(எபேசியர் 2:19)*

'ஆண்டவரே! என அழைத்தல்'

**ஆ. பிழை நினைத்துருகும் தாழ்மை** *(நீதி 28:13)*

'நாமோ நியாயப்படி'

**இ. பிறருக்கு நற்செய்தி கூறும் துணிவு** *(எபே 5:19; I தீமோ 4:11)*

'நீ... பயப்படுகிறதில்லையா?'

ஈ. **பரம ராஜ்ய தரிசனம் / வாஞ்சை**

'உமது ராஜ்யத்தில் வரும்போது'

## மூன்றாம் திருமொழி!

உறவின் உன்னதம்

**3. ஸ்திரீயே! அதோ உன் மகன்! அதோ! உன் தாய்!**

(யோவான் 19:26, 27)

மன்னிப்பு - இரட்சிப்பு
மொழிகளைத் தொடர்ந்து பராமரிப்பு
தருகிறார் தாய்க்கு!

இது உறவின் வார்த்தை; எத்தகு உறவு?

***A. இம்மையை மறவாத மறுமையின் உறவு:***

மாபெரும் உலக மீட்புப் பணியில் ஈடுபட்ட போதும் தாயைப் பராமரித்தார்.

***B. மறுமையைத் துறவாத இம்மையின் உறவு:***

யோவானிடம் தாயை ஒப்படைத்த காரணம் விசுவாசி - உலக செல்வம் - அன்பு நெஞ்சம்

***C. துயரத்தில் வாடுவோரை ஆற்றும் உறவு:***

மரியன்னையின் மாளாத் துயரக் கட்டத்தில் ஆறுதல்

***D. தூரச் சென்றோரை இழுத்திணக்கும் உறவு:***

ஓடிப் போன சீடன் (மத்தேயு 26:56)
சொந்தக் குடும்பம் / பெற்றோர்
(I தீமோ 5:4,8)

## நான்காம் திருமொழி!

தியாகத்தின் உச்சம்

**4. என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?**

(மாற்கு 15:34)

***A. இது எத்தகு மொழி?***

**அ. மறை மொழி:**

அதாவது வேத வார்த்தை - அதே நேரத்தில் மறை பொருளான மொழி

**ஆ. தனிமை ஓலம்:**

பிதா என அழைத்தவர் தேவனே எனக் கதறுகிறார். மனித பாவம் பிதாவின் முகத்தை மறைக்கிறது.

**இ. வெற்றிக் குரல்:**

எப்போது சொன்னார்?
போர் முடிந்த பிறகு

***B. இதனால் நாம் அறிந்து கொள்ளும் பாடங்கள்:***

**அ. மனித பாவத்தின் பாரம்**

பிதா, முகத்தையே குமாரனுக்கு மறைத்தது

**ஆ. தேவ நீதியின் சாரம்**

(எபி 2:9; ஏசா 63:1-3)

**இ. பக்தரின் பலன்**

**ஈ. பக்தரின் கடன்**

நாமும் கடவுளுக்காகப்
பாவ உறவைத் துறப்போம்!

## ஐந்தாம் திருமொழி!

மானுடத்தின் வெளிப்பாடு

**5. தாகமாயிருக்கிறேன்!**

(யோவான் 19:28)

***A. எப்போது கூறினார்?***

**அ. எல்லாம் முடிந்தது என்று அறிந்த பின்** (யோவான் 19:29,30)

**ஆ. வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக**

***B. எத்தகு தாகம்?***

**அ. சரீரத் தாகம்:**

மனித குமாரனுக்கு இயல்பே - பாடுகளின் உச்சம்

**ஆ. ஆன்மீகத் தாகம்:**

நமது ஆன்மீக வாழ்வு பற்றிய ஏக்கம் அன்றும் இன்றும்

***C. நம் தாகம் தீர்க்க இரங்குகிறார்:***
(யோவான் 7:37,38; 4:14)

***D. நாம் செய்ய வேண்டுவன!***

**அ. நாம் அவரது தாகம் தீர்ப்போம்**

**ஆ. அவரில் நம் தாகம் தீர்வோம்** (யோ7:37,38)

**இ. அவர் போல் தாகம் கொள்வோம்** (மத் 5:6)

## ஆறாம் திருமொழி!
வெற்றி முழக்கம்

**6. முடிந்தது!** (யோவான் 19:30)

இயேசுவின் நீண்ட ஆன்மீகப் போராட்டத்தின் நிறைவான வெற்றி முழக்கம். கிரேக்க மொழியில் **'டெஸ்டெலஸ்டாய்'** ஒட்டப்பந்தய வீரன், நிறைவில் கூறுவது!
கிரேக்க ஓவியன், பணி முடிந்தபோது கூறுவது!

***A. எது அவர் பணி? பணியின் இருபக்கங்கள்:***

**அ.பிதாவின் சித்தம் செய்தல்**
(யோவான் 5:30;6:38; 10:7,9)

**ஆ. அனுப்பப்பட்ட மக்களை மீட்டெடுத்தல்**

***B. எதினால் இப்படிக் கூறமுடிந்தது? (பணிமுடிந்தது)***

**அ. பணியில் பாடுகளைச் சகிக்க அர்ப்பணிப்பு, ஆயத்தம்.**

**ஆ. பணிக்கனுப்பிய தந்தையோடு இடையறா ஐக்கியம்.**

**இ. பணியால் பலன்பெற வேண்டிய மக்கள் மேல் பரிவு.**

அவர் முடித்த பணி, நாம் இன்று பயன்பெற வேண்டும்; பிறரைப் பயன்பெற வழி நடத்த வேண்டும்.

## ஏழாம் திருமொழி!
அர்ப்பணிப்பின் முழக்கம்

**7. பிதாவே! உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்!**
(லூக்கா 23:46)

இயேசுவின் கடைசி மொழிகளில் கடைசி மொழி இரண்டு பகுதிகள் உடையது.

***A. அழைப்பு - CALL***

**அ. எவரை?பிதாவை**(சங்கீதம் 31:5)
தாவீதின் மொழிகளோடு இதைக் கூட்டினார்.

**ஆ. எப்போது? துன்பத்தின் உச்சியில்**
(ஓசியா 6:4; ஆபகூக் 3:17,18)

**இ. எதற்கு? தம்மை ஒப்புவிக்க!**
சபிக்கவோ முறுமுறுக்கவோ அல்ல.

***B. படைப்பு - COMMITMENT***

**அ. எவரிடம்? பிதாவிடம் படைத்தார்**
சரியான, பாதுகாப்பான இடம்
(சங்கீதம் 37:5)

**ஆ. எப்போது? ஏற்ற பணியை முடித்த பிறகு**
(யோவான் 19:28-30)

**இ. எதை? ஆவியை**
சரீரம் (தானியேல் 3:28;
I பேதுரு 2:24; ரோமர் 12:1)
ஆத்துமா
(ஏசாயா 53:10-12; மத்தேயு 26:38)

***மீதியான*** ஆவியையும்
*ஒப்படைக்கிறார்;*
*ஒப்படைத்து விட்டார்.*

**'ஒரே வழி'** பத்திரிக்கை ஆசிரியர் முனைவர். **மோசஸ் மைக்கேல் ஃபாரடே, சென்னை** அவர்களின் அருளுரைக் குறிப்புகள் இந்த பிரதியில் கொடுக்கப் பட்டுள்ளது. தியானித்து பயன் பெறுங்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி!



# சிலுவை வழிச் சிந்தனைகள்



## சிலுவைச் செயல்கள்

**I. சிலுவை அறிவிக்கிறது - 1 கொரிந்தியர் 1:18**

- கடவுளின் அன்பை அறிவிக்கிறது. யோவான் 3:16 ரோமர் 5:7,8
- கடவுளின் செயல்முறையை அறிவிக்கிறது.யோவான்14:2, அப் 14:22
- கடவுளின் வெற்றியை அறிவிக்கிறது. யோவான் 19:3

**II. சிலுவை ஆற்றுகிறது - ஏசாயா 53:4,5**

- பாவத்தின் காயத்தை ஆற்றுகிறார். எபிரெயர் 9:12-14
- பாடுபடுகிறவர்களை ஆற்றுகிறார். எபிரெயர் 12:2-4
- பலவீனர்களை ஆற்றுகிறார். 2 கொரிந்தியர் 13:4
- பரம நம்பிக்கையால் ஆற்றுகிறார். ரோமர் 8:3,4

**III. சிலுவை அழைக்கிறது**

- **நம்மை நாம் இழக்க அழைக்கிறது. மத்தேயு 16:24**
- **உலக மதிப்புகளை உதறித் தள்ளுகிறது - கலாத்தியர் 6:14**
  - i. பாடுகளின் வழியாக பரிபூரணம் - எபிரெயர் 2:10
  - ii. தன்னை இழந்து பிறரை ஆதாயப்படுத்துதல். யோவான் 12:24
  - iii. பலவீனத்தில் பலம். 1 கொரிந்தியர் 1:27
  - iv. விளம்பரம் நாடாத விந்தைச் செயல்கள். மத்தேயு 9:30
  - v. அன்பின் வழி ஆளுகை மாற்கு 10:43,44
- **பாவத்திற்கு எதிராகப் போரிட அழைக்கிறது.எபேசியர்2:14-16**
  - i. பாவத்தை எதிர்த்துப் போர். எபிரெயர் 12:4
  - ii. விசுவாசம் காக்கும் போராட்டம். பிலிப்பியர் 1:29,30
  - iii. சுவிசேஷ ஊழியப் போராட்டம். எபிரெயர் 6:12-20
  - iv. ஜெபப் போராட்டம். கொலோசெயர் 4:12

**IV. சிலுவை நம்மை வாழ்விக்கிறது**

- அவரால் நாம் வாழ்கிறோம். 1 பேதுரு 2:24
- அவருக்குள் நாம் வாழ்கிறோம். பிலிப்பியர் 3:10
- அவருக்காய் நாம் வாழ்கிறோம். கலாத்தியர் 2:19



எழுதியவர் - Dr. மோசசு மைக்கேல் பாரடே